# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC.241/2016
Deposition of witness for PW.9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு. பக்தவச்சலம் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | சார்பு ஆய்வாளர் |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 12.10.2022

முதல் விசாரணை – நான் தற்போது பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டேன். 20.9.2014 ம்தேதி 12.00 மணிக்கு காவல் நிலையத்தில் நான் பொறுப்பதிலிருந்தபோது கம்மாப்பட்டி கீழத்தெருவைச்சேர்ந்த கோவிந்தசாமி மகன் காளியப்பன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய கு.எண்.542/2014 பிரிவு 392 இதச மற்றும் 27 (i)(a) Indian Arms Act படி வழக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அசலை திருவில்லிபுத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை நகல் ஒன்றை திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை **அசாஆ.13** ஆக குறியிடப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை – நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் புகார் மனு பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது மேலதிகாரிகளின் கட்டாயத்தின்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.